வகுப்பு : 9

தேர்வு எண் [ ] [ ] [ ] [ ] [ ] [ ] 

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## தமிழ்

நேரம் : 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள்:15)

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. தமிழ்விடு தூது -------- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   (அ) தொடர்நிலைச் செய்யுள் (ஆ) புதுக்கவிதை
   (இ) சிற்றிலக்கியம் (ஈ) தனிப்பாடல்
2. பொருந்தாத இணை எது?
   (அ) ஏறுகோள் – எருதுகட்டி (ஆ) திருவாரூர் – கரிக்கையூர்
   (இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு (ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்
3. ஐந்து சால்புகளின் இரண்டு
   (அ) வானமும் நாணமும் (ஆ) நாணமும் இணக்கமும்
   (இ) இணக்கமும் சுணக்கமும் (ஈ) இணக்கமும் பிணக்கமும்
4. பொருத்தமான பெயரடையை எழுதுக.
   எல்லோருக்கும் --------- வணக்கம்.
   (அ) நல்ல (ஆ) பெரிய (இ) இனிய (ஈ) கொடிய
5. இளங்கமுகு, செய்கோலம் – இலக்கணக்குறிப்புத் தருக.
   (அ) உருவகத்தொடர், வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
   (இ) வினைத்தொகை, பண்புத்தொகை (ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்
6. சித்திரமும் கைப்பழக்கம் ----------- தொடரில் விடுபட்ட இடத்தை பழமொழி கொண்டு நிறைவு செய்க.
   (அ) இடமெல்லாம் சிறப்பு (ஆ) சிலைமேல் எழுத்து
   (இ) சொல் ஆடாதே (ஈ) செந்தமிழும் நாப்பழக்கம்
7. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை --------
   (அ) விலங்கு உருவங்கள் (ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   (இ) தெய்வ உருவங்கள் (ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்
8. ------ பெரும் பொதுக்கூட்டம். பொருத்தமான உரிச்சொல்லால் நிரப்புக.
   (அ) கடி (ஆ) மா (இ) மழ (ஈ) தட
9. இந்திய தேசிய இராணுவத்தை -------- இன் தலைமையில் -------- உருவாக்கினர்.
   (அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் (ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
   (இ) மோகன்சிங், ஜப்பானியர் (ஈ) மோகன் சிங், இந்தியர்
10. ‘வானொலி கேட்டு மகிழ்ந்தனர்’ என்பது
   (அ) கருவியாகு பெயர் (ஆ) காரியவாகுபெயர்
   (இ) தொழிலாகுபெயர் (ஈ) கருத்தாவாகுபெயர்
11. எனக்கு -------- பங்கு பிரித்து கொடுக்க வா! கீழே ஈரம்; பார்த்து உன் ------ ஐ வை.
   (அ) அலை (ஆ) கால் (இ) அகல் (ஈ) எழுதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்கவும்.

அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்
கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்
மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்
ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பலே.

12. இச்செய்யுள் அடியில் இடம்பெற்றுள்ள மடிவு என்ற சொல்லின் பொருள்

(அ) சோறு (ஆ) சோம்பல் (இ) மகளிர் (ஈ) எல்லை

13. அடி எதுகைச் சொற்கள்

(அ) அடிசில், கொடியனார் ஆ) அடிசில் , ஆயிரம்

இ) கொடியனார், கோலமும் ஈ) மடிவுஇல், மங்கலமும்

14. செய்கோலம் என்பதன் இலக்கணக்குறிப்பு

(அ) பண்புத்தொகை (ஆ) வினையெச்சம்

(இ) வினைத்தொகை (ஈ) பெயரெச்சம்

15. இச்செய்யுள் இடம்பெற்றுள்ள நூல் –

(அ) முத்தொள்ளாயிரம் (ஆ) சீவகசிந்தாமணி

(இ) இராவணகாவியம் (ஈ) நாச்சியார் திருமொழி

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4X2=8

வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.

அ) பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர்.

ஆ) கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது.

17. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

18. 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

19. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

20. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

21. 'அடுக்கிய' எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5X2=10

22. சமுகத்திற்கு உங்களது பணிகள் எவையேனும் இரண்டினை எழுதுக.

23. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

24. கலைச்சொல்லை எழுதுக.

அ) Social Reformer

ஆ) Irrigation technology

25. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

சேர்ந்து – சேர்த்து

26. பகுபத உறுப்புகள் ஆறினை எழுதுக.

CH/9/Tam

Shot on AWESOME A05s

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27.இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

அ) அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

ஆ) சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்

28. 'பாய்வன' – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2X3=6

29.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

முத்துலட்சுமி தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் மட்டுமல்ல, இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி. தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

வினாக்கள்:

1. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவரான முத்துலட்சுமி வகித்த பதவிகள் இரண்டினை எழுதுக.
2. எந்தெந்த சட்டங்கள் நிறைவேற முத்துலட்சுமி காரணமாக இருந்தார்?
3. அவ்வை இல்லம், புற்றுநோய் மருத்துவமனை ஆகியவை எங்கு, எப்போது நிறுவப்பட்டன?

30.அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை– அதற்கு நாம் செய்ய வேண்டியனவற்றை எழுதுக.

31. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 2X3=6

34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32.'மாகால் எடுத்த முந்நீர்போல' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. 'உழவு' குறித்த திருவள்ளுவரின் கருத்துகளை எழுதுக.

34. அடி பிறழாமல் எழுதுக.

அ) 'நீர் இன்று' எனத் தொடங்கி 'நிலத்தொடு நீரே' முடிய புறநானூற்றுப் பாடல்.

(அல்லது)

ஆ) 'அள்ளல் பழனத்து' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல்.

பிரிவு – 3 (மதிப்பெண்கள்:6)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். 2X3

35.தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

37.கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X

38. அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

(அல்லது)

CH/ M/9

Shot on AWESOME A05s

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஆ) 'கேள்வி' அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள திருக்குறளின் கருத்துகளை எழுதுக.

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளை பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிறைவு செய்க.

42. அ) உங்கள் செயல்பாடுகளால் பாராட்டுப் பெற்ற சூழல்கள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

1. Thinking is Great
2. Union is Strength
3. Walk like a bull
4. Strengthen the body
5. Practice what you have learnt

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

44. அ) "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதையின் மூலமாக விளக்குக.

45. குறிப்புகளைக் கொண்டு "சாலைப் பாதுகாப்பு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – சாலை விதிகள் – போக்குவரத்துக் குறியீடுகள் – சாலையில் செல்லும்முன் நினைவில் கொள்ள வேண்டியவை – முடிவுரை

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு "சுற்றுச்சூழல் மாசுபாடு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை – சுற்றுச்சூழல் மாசுபாடு – நில மாசு – நீர் மாசு – காற்றுமாசு – ஒலி மாசு – மாணவர் கடமை – முடிவுரை.

Shot on AWESOME A05s

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com